செ.வெ.எண்: 1032

23.11.2010

## செய்தி வெளியீடு – 23.11.2010.

## ரூ.23.50 கோடி நபார்டு வங்கி நிதியுதவியுடன் மதுரை மாவட்டம், நிலையூர் கால்வாய் புனரமைக்கப்படும்.

### முதலமைச்சர் கலைஞர் ஆணை

மதுரை மாவட்டம், வாடிப்பட்டி வட்டம், சோழவந்தான் அருகே முள்ளபள்ளம் கிராமத்தில் வைகை ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள நிலையூர் படுகை அணையிலிருந்து நிலையூர் கால்வாய் பிரிந்து 28 கி.மீ தூரம் சென்று பெருங்குடி கண்மாயை அடைகிறது. அதன்பின்பு பெருங்குடி கண்மாய் முதல் சோளங்குருணி கண்மாய் வரை 8.7 கி.மீ நீளத்திற்கு நிலையூர் நீட்டிப்பு கால்வாய் அமைக்கப்பட்டுள்ளது.

இக்கால்வாய், வைகை ஆற்றில் வரும் வெள்ளநீரை மதுரை விருதுநகர், சிவகங்கை மாவட்டங்களில் உள்ள 94 கண்மாய்கள் பயன்பெறும் வகையில் அமைக்கப்பட்டது. அவற்றின் பாசனப்பரப்பு 9948 ஏக்கர் ஆகும். நிலையூர் நீட்டிப்புக் கால்வாயின் கொள்ளளவு வினாடிக்கு 654 கன அடியாகும். ஆனால் தற்போது ஏறத்தாழ 140 கன அடி அளவே தண்ணீர் வருகிறது. நிலையூர் நீட்டிப்பு கால்வாய்க்கு தேவைப்படும் நீரை தற்பொழுது திருப்பிவிட இயலாத நிலை இருக்கின்றது.

எனவே, 9948 ஏக்கர் நிலப்பரப்பும் முழுபாசன வசதியைப் பெறும் வகையில் நிலையூர் கால்வாயின் கொள்ளளவை 140 கன அடியிலிருந்து 654 கன அடியாக அதிகரித்திட 23.50 கோடி ரூபாய் செலவில் இக்கால்வாய் புனரமைப்புப் பணிகளை உடனடியாக மேற்கொள்ள முதலமைச்சர் கலைஞர் ஆணையிட்டுள்ளார்.

சு. இராமசுந்தரம்
அரசு முதன்மைச் செயலாளர்

// உண்மை நகல் //

பிரிவு அலுவலர்
23/11/10

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9